27.03.2026 OS.No.63/2024 PW2 Name :.**மோகன்**

குறுக்கு விசாரணை

1. நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சி சம்மன் எதுவும் வரவில்லை. இந்த வழக்கில் யார் வாதி என்று எனக்கு தெரியாது. வழக்கின் எதிர்வாதி யார் என்று எனக்கு தெரியாது. வாதி எதற்காக வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் தெரியும். ரவிசந்திரனிடமிருந்து சொத்தை கண்ணன் வாங்கியது தொடர்பான பிரச்சனை குறித்து வழக்கு போடபட்டுள்ளது. வழக்கு சொத்து ஆலங்காயம் பெருமாள்பேட்டையில் உள்ளது. அதன் சர்வே எண் தெரியாது. பரப்பு சுமார் 600 இருக்கும். சதுரடி எவ்வளவிற்கு கிரையம் பேசபட்டது என்பது தெரியும்.
2. மொத்தமாக ரூ.31,25,000/–திற்கு வழக்கு சொத்து விலை பேசபட்டது. ஒரு சதுரடி விலை எனக்கு தெரியாது. வீடு, நிலம் வாங்கி விற்பனை செய்யும் புரோக்கர் வேலை செய்கிறேன். வாதிக்கு ஆதரவாக நான் வழக்கு சொத்தை கிரையம் பெற புரோக்கர் வேலை செய்தேன். பிரதிவாதி நிலத்தை விற்பதாக என்னிடம் கூறினார். என்னுடைய வீட்டிற்கு எதிரில் வாதி ரவிச்சந்திரன் ஒர்க்சாப் வைத்துள்ளார். வழக்கு சொத்து உள்ள ஊரில் தான் நான் குடியிருக்கிறேன்.
3. வழக்கு ஒப்பந்தத்தின் தேதி தற்போது சரியாக நியாபகம் இல்லை. வழக்கு ஒப்பந்தம் சார்பதிவாளர் அலுவலகம் அருகில் எழுதபட்டது. அது பதிவு செய்யபடவில்லை. பத்திரத்தை ராஜா என்பவர் எழுதினார். அதில் ஜோசப், கிருஷ்ணமூர்த்தி மோகன் ஆகியோர்கள் சாட்சி கையெழுத்து

போட்டுள்ளார்கள். கிரைய ஒப்பந்தம் குறித்து பிரதிவாதியின் குடும்பத்தினருக்கு தெரியும்.

4. முன்பண தொகையாக ரூ.1,25,000/- கொடுக்கபட்டது. பிரதிவாதி வழக்கு சொத்தை கிரையம் செய்து கொடுக்க தயாராக உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி வழக்கு சொத்தை கிரையம் பெற தயாராக தான் உள்ளார். தற்போது அதை என்னால் முன்னின்று முடித்து வைக்கமுடியாது. சொத்தை கிரையம் பெற வாதி தயார் இல்லை என்பதை பிரதிவாதியிடம் கூறிய விவரம் எனக்கு தெரியும். அது சம்மந்தமாக அறிவிப்பு கொடுக்கபட்ட விவரம் தெரியும்.

5. அறிவிப்பு தேதி தெரியாது. பதில் அறிவிப்பு கொடுக்கபட்டதா என்று தெரியாது. பிரதிவாதி வாதிக்கு பணத்தை திருப்பி செலுத்தியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கு பற்றிய விவரம் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 27/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.27 16:32:55 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.